# அரசு பொதுத்தேர்வு வினாத்தாள்- மார்ச் 2014.

பதிவு எண் | | | | | | |

## தமிழ் முதல்தாள்

**காலம். 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

**அறிவுரை** : **1.** அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** : 1. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்..

2. வினா எண் 49க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

### பிரிவு – I (மதிப்பெண்) : 20

### பகுதி-1

**உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6 x 1 = 6**

1. **திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல்……………………..**

   அ) நால்வர் நால்மணிமாலை ஆ) திருவள்ளுவமாலை இ) இரட்டைமணிமாலை

2. **பாரதிதாசனார் ............. என அழைக்கப்படுகிறார்.**

   அ) புரட்சிக்கவிஞர் ஆ) தேசிய கவிஞர் இ) உவமைக் கவிஞர்

3. **நற்றிணை .........................நூல்களைச் சார்ந்தது.**

   அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை இ) பதினெண்கீழ்க்கணக்கு

4. **தமிழர்கள் நிலத்தை ............... வகையாகப் பரித்துக் காட்டியிருக்கிறார்கள்.**

   அ) மூன்று ஆ) ஆறு இ) ஐந்து

5. **பகைவனிடமும் அன்பு காட்டு எனக்கூறிய நூல்** :

   அ) பகவத்கீதை ஆ) நன்னூல் இ) பைபிள்

6. **வள்ளலாரின் இயற்பெயர் ............................**

   அ) சம்பந்தர் ஆ) இராமலிங்கர் இ) தாயுமானவர்

| | | | |
|---|---|---|---|
| 3. விடைகள் : | 1. ஆ) திருவள்ளுவமாலை | 2. அ) புரட்சிக்கவிஞர் | 3. ஆ) எட்டுத்தொகை |
| | 4. இ) ஐந்து | 5. இ) பைபிள் | 6. ஆ) இராமலிங்கர் |

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக** **6 x 1 = 6**

7. **நால்வகைப்பாக்களும் வயலுக்கு ................................ அமைந்துள்ளன.**
8. **தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் ................................**
9. **'நிற்கநேரமில்லை' என்ற கவிதை ............................... என்னும் கவிதைத்தொகுப்பில் உள்ளது.**
10. **அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ................................**
11. **தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் .......................**
12. **இலெமூரியாவை .......................... நாகரிகத் தொட்டில் என்பர்.**

| | | | | |
|---|---|---|---|---|
| விடைகள் : | 7. வரப்புகளாக | 8. திருநாவுக்கரசர் | 9. பூத்தது மானுடம் | 10. பாரத ரத்னா |
| | 11. திரு.வி.க. | 12. மனித | | |

### பகுதி - 3

**பொருத்துக.** **4 x 1 = 4**

| | | | |
|---|---|---|---|
| 13. | **இந்து** | - | **மூங்கில்** |
| 14. | **சந்தம்** | - | **புலி** |
| 15. | **உழுவை** | - | **அழகு** |
| 16. | **பணை** | - | **நிலவு** |

**விடைகள் :** 13. நிலவு 14. அழகு 15. புலி 16. மூங்கில்

## பகுதி-4

**விடைக்கேற்ற வினா அமைக்க.**

17. தமிழர் மனித வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனர்.
    **தமிழர் மனித வாழ்வை எவ்வாறு பிரித்தனர்?**

18. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
    **பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தவர் யார்?**

19. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி– ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
    **திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?**

20. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.
    **எங்கு பயில்வோருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன?**

---

## பிரிவு – II (மதிப்பெண்) : 20

## பகுதி-1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** **5 x 2 = 10**

**21. ஊக்கமுடையார் ஒடுக்கம் எதனைப் போன்றது?**

* ஊக்கமுடையவன் காலத்தை எதிர் பார்த்து அடங்கி இருப்பது,
* ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

**22. கணிமேதாவியார் குறிப்பு வரைக.**

* ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார். கணிமேதையர் என்றும் அழைக்கப்படுகிறார்.
* இவர் சமண சமயத்தவர். கொல்லாமை முதலிய உயரிய அறக்கருத்துளை ஏலாதியில் வலியுறுத்துகிறார்.
* இவரது காலம் ஐந்தாம் நூற்றாண்டு.
* திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

**23. குகன் இராமனை எவ்வாறு பணிந்து வணங்கினான்?**

* இருள் போன்று கறுத்த தலைமுடி தரையில் படும்படி விழுந்து வணங்கினான்.
* பின்னர் எழுந்து நின்று வணங்கினான்.
* உடலை வளைத்து வாயைக் கைகளால் பொத்தி அடக்கமாக நின்றான்.

**24. "இப்போது இங்கு அவன் உதவான்" யார் யாரிடம் கூறியது?**
பெரியபுராணத்தில் அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடம் கூறியது.

**25. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?**

1. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் அதிவீரராம பாண்டியன்.
2. போலிப்புலவர்களின் செவியை அறுப்பவர் வில்லிபுத்தூரார்
3. போலிப்புலவர்களின் தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்.

**26. வேந்தற்குரிய பொருள்கள் யாவை?**

* அரசுரிமையால் வந்த பொருள்.
* மக்கள் வரியாகத் தந்த பொருள்.
* பகைவரை வென்று சேர்த்த பொருள்.

**27. ஆற்றுதல் என்பது யாது?**
ஆற்றுதல் என்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல் ஆகும்

---

## பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** **5 x 2 = 10**

**28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?**

"இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது" எனறு முனைவர் எமினோ கூறுகிறார்.

**29. மொழிமாற்றம் என்றால் என்ன?**

* ஒரு மொழியில் உள்ள திரைப்படத்தை
* மற்றொரு மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்று பெயர்.

**30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?**

1. **குமரிமலை,** 2. **பஃறுளி ஆறு** போன்ற தமிழகப் பகுதிகள் கொடுங்கடலால் கொள்ளப்பட்டன.

**31. ஞாலம் பெயர்க்காரணம் கூறு.**

* ஞாலம் என்னும் சொல் ‘ஞால்’ என்னும் சொல்லில் இருந்து தோன்றியது.
* ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பொருள்.
* உலகம் எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அண்டவெளியில் தொங்கிக் கொண்டிருப்பதனை இஃது உணர்த்துகிறது.

**32.** காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?

* கதர் இயக்கம்
* மதுவிலக்கு
* தீண்டாமை ஒழிப்பு

ஆகியன காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள்.

**33. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டனைக் கூறு?**

* தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.
* குருவை வணங்கக் கூசி நிற்காதே.

**34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?**

* உயிரி தொழில் நுட்பத்துறை
* நுண்ணியல் தொழில் நுட்பத்துறை
* ஆகியன தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறைகள் ஆகும்.

---

## பிரிவு – III (மதிப்பெண்) : 24

### பகுதி-1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 4 = 12**

**35. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?**

* எளிய நடையில் தமிழ்நூல்களை எழுதிட வேண்டும்.
* புதிய இலக்கண நூல்களையும் எழுதிட வேண்டும்.
* உலகில் புதிதாகத் தோன்றுகின்ற ஆய்வுச் சிந்தனைகள் யாவற்றையும் விளக்கப்படங்களுடன் தெளிவுபடுத்துகின்ற நூல்களை வெளியிட வேண்டும்.
* வறுமையினால் ஒரு தமிழன் கல்வி கற்கவில்லை என்றால், அதற்காக இங்குள்ள தமிழர் எல்லாரும் நாணிட வேண்டும். கல்விக்கு வறுமை ஒரு தடையாக இருக்கக் கூடாது.
* இவ்வழிகளைப் பின்பற்றிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்ய முடியும் என்கிறார் பாரதிதாசன்.

**36. கம்பராமாயணம் சிறுகுறிப்பு வரைக.**

* கம்பர் எழுதியது கம்பராமாயணம்.
* வான்மீகி வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவி தமிழ் மரபுக்கு எற்ப கம்பர் எழுதியுள்ளார்.
* கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
* கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டுள்ளது.

**37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுபவை யாவை?**

* சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுபவை பொன்னும் பவளமும் முத்தும் மாணிக்கமும் ஆகும்.
* தோன்றும் இடத்தால் பொன்னும், பவளமும் முத்தும், மாணிக்கமும் ஒன்றுக்கொன்று தொலைவில் இருக்கின்றன.
* மாலை கோத்து அணிகலன் அமைக்கும் போது, தம்முள் ஒன்று சேர்கின்றன.
* அதுபோல சான்றோர் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் தக்க சமயத்தில் தம்முள் ஒன்றுசேர்வர்.

**38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.**

* நபிகள்நாயகத்தைக் கண்டதும் கூர்மை பொருந்திய நகத்தினையும் வலிமையையும் உடைய புலி தனது வாலை வளைத்தது.
* உடல் நடுங்கி தலையைத் தாழ்த்தியது.
* நபிகள் நாயகத்தை நோக்கி மெல்லமெல்ல நடந்து வந்தது.
* குளிர்ச்சி பொருந்திய தளிர் போன்ற நபிகள் நாயகத்தின் திருவடிக் காட்சி காணக்கிடைத்தது என்றெண்ணி பணிந்து வணங்கியது.

**39. 'சாதனைப்பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?**

* நல்ல செடி பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.
* செடியின் வெற்றி பூவில் உள்ளது.
* அதைப்போல் இலக்குகளை அடையும் வரை ஓய்வின்றி உழைக்க வேண்டும்.
* **துன்பங்கள் யாவற்றையும் மறக்கச் செய்யும் வெற்றிகளே** 'சாதனைப்பூக்கள்' என்று இளந்திரையன் சுட்டுகிறார்.

---

## பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 4 = 12**

**40. பெண்கல்வி குறித்து பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**

* பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கும் இன்றியமையாதது.
* ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
* அவர்களுக்கு உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும்.
* பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருப்பது கொடுமை. இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்.

**41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?**

* கல்வி என்பது தகவல்களைத் திணிப்பதாக இல்லாமல் மாணவர் விரும்பிக் கற்கும் வகையில் இருக்க வேண்டும் என்றார்.
* 14 வயது வரையிலும் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாகக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் 48ஆவது விதியைக் கொண்டு வந்தார்.
* 1946ஆம் அண்டு மக்கள் கல்விக் கழகத்தை தோற்றுவித்தார்.
* இவரது அரிய முயற்சியால் மும்பையில் சித்தார்த்தா உயர் கல்வி நிலையம் உருவானது. அங்கு அறிவு வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**42. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

* கேட்டார்ப் பிணிக்கும் வகையில் கருத்துகளைப் பேசுதல் வேண்டும்.
* பேசும் மொழி அழகியதாகவும் தெளிவாகவும் சிக்கலற்றதாகவும் இருக்க வேண்டும்.
* செஞ்சொற்களால் இனிய, எளிய நடையில் பேசுதல் வேண்டும்.
* சொற்களை ஆய்ந்தறிந்து அளவாய்ப் பயன்படுத்துதல் வேண்டும்.
* சொல்லுகின்ற செய்தியை விரைவாகப் பேசுதல் கூடாது.
* சொல்லியதையே திரும்பத்திரும்பச் சொல்லுதல், பொய்யுரை, மிகைப்படுத்திக் கூறுதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

**43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.**

* பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். 'உழுதுண்டு வாழ்வாரே' வாழ்வார் என்று திருக்குறள் கூறுகிறது.
* உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலை தமிழர் பெரிதும் போற்றினர்.
* 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் புகழ்மொழி இன்றளவும் போற்றப்படுகிறது.
* உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம், வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
* மருதநிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப் படுத்தினர் பழந்தமிழர்.

**44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

* ஆங்கிலேயரைத் துன்புறுத்தி விடுதலை பெறுவதை விட. அமைதியான முறையில் அவர்களை எதிர்த்து மனம் மாறச் செய்து விடுதலை பெறுவதே சிறந்தது என்றார்.
* வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது, தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது என்றார்.
* வன்முறையை அன்பு, அருள் ஆகிய அறவழிகளில்தான் தடுக்க முடியும் என்றார்.
* வலிய போரில் சாகின்றவர்களைவிட அறவழிப் போரில் இறப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும்.
* இந்தியா இதனை ஏற்று உலக நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்றார்.
* சிறையில் தாம் தயாரித்த காலணிகளைத் தம்மைச் சிறையில் அடைத்த ஆளுநர் ஸ்மட்ஸ் என்பவருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

---

## பிரிவு – IV (மதிப்பெண்) : 10

**45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** **5**

**அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்**
**செறிவெனப் படுவது கூறியது மாறாஅமை**
**நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை**
**முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்**

1. **இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?**
   இப்பாடல் இடம் பெற்ற நூல் **கலித்தொகை.**
2. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
   **நல்லந்துவனார்.**
3. **செறிவு எனப்படுவது யாது?**
   **செறிவு எனப்படுவது கொடுத்த வாக்கைக் காத்தல்**
4. **நோன்றல் - பொருள் தருக**
   பொறுத்தல்
5. **இப்பாடலில் பயின்று வந்துள்ள அடியெதுகைகளை எழுது**
   1. அறிவென - செறிவென **(றி),** 2. நிறையென - முறையென **(றை)**

**46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5x1=5

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது அவர்தம் கருத்து.

பெரியார் சமூக முரண்களையும் மூடக்கருத்துகளையும் எதிர்த்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூக மாற்றத்தை விரும்பியவர். "பெண்களே சமூகத்தின் கண்கள்" எனக் கருதியவர். பெண்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

1. **இரு பாலருக்கும் பொதுவானது என்று பெரியார் கருதுவது யாது?**
   இரு பாலர்க்கும் பொதுவானது என்று பெரியார் கருதுவது **ஒழுக்கமும் கற்பும்** ஆகும்.
2. **"பெரியார் எவற்றை எதிர்த்தார்?**
   பெரியார் சமூக முரண்களையும் மூடக்கருத்துகளையும் எதிர்த்தார்.
3. **பெரியார் பெண்களை எவ்வாறு உயர்த்திக் கூறியுள்ளார்?**
   பெரியார் பெண்களை, **'சமூகத்தின் கண்கள்'** என உயர்த்திக் கூறியுள்ளார்.
4. **பெரியார் .................... பார்வையுடையவர்?**
   பெரியார் **தொலை நோக்குப்** பார்வையுடையவர்
5. **மக்கள் எப்படி இருந்தால் நாடு வளமாகும்?**
   **ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருந்தால் நாடு வளமாகும்.**

## பிரிவு – V (மதிப்பெண்) : 26

### பகுதி -1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 2 x 8 = 16**

**47. அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னனுக்கும் இடையே நடைபெற்ற சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.**

**கண்ணகிக்கும் பாண்டிய மன்னனுக்கும் இடையே நடைபெற்ற சொற்போரின் உரையாடல் வடிவம்**

**பாண்டியன் :** இளமையான கொடி போன்ற பெண்ணே! நீர் வழியும் கண்களோடு எம்முன் வந்து நிற்கும் நீ யார்?

**கண்ணகி :** ஆராய்ந்து நீதி வழங்காத மன்னனே! "உன்னோடு கூறுவது ஒன்று உண்டு. தன்னிடம் அடைக்கலமாகவந்த புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும் கன்றினை இழந்த பசுவிற்காகத் தன் அருமை மகனையேத் தேர்க்காலில் இட்டுக்கொன்று நீதியைக் காத்த மனுநீதிச் சோழனும் வாழ்ந்த பெரும் புகழுடைய புகார் நகரமே நான் பிறந்த ஊர்.

அப்புகார் நகரிலே, பழியில்லாச் சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசாத்துவான் என்னும் வாணிகனின் மகனை மணம் புரிந்தேன். ஊழ்வினைப பயன் காரணமாக உனது மதுரை நகருக்கு வாழ்வதற்காக வந்து, என் கால்சிலம்பினை விற்க முயன்ற போது, உன்னால் முறைதவறிக் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான், கண்ணகி என்பது என் பெயர்"

**பாண்டியன் :** கள்வனைக் கொல்வது கடுங்கோல் அன்று, அதுவே அரச நீதியாகும் என்பதை அறிவாய் பெண்ணே!

**கண்ணகி :** அறநெறியில் செல்லாத கொற்கை வேந்தனே! என் காற்சிலம்பில் உள்ளவை மாணிக்கப் பரல்கள்.

**பாண்டியன் :** நன்றாகச் சொன்னாய் பெண்ணே! எம்முடைய சிலம்பில் இருப்பவை முத்துப் பரல்கள்.

***(கோவலனிடம் கைப்பற்றிய சிலம்பினைக் கொண்டு வந்து அவையில் முன் வைக்கிறான் மன்னன். கண்ணகி அச்சிலம்பை எடுத்து ஓங்கி உடைக்கிறாள். அதிலிருந்து மாணிக்கப்பரல்கள் வெளிப்பட்டன. அதில் ஒன்று பாண்டியனின் உதட்டில் பட்டுத் தெறித்தது)***

**பாண்டியன் :** பொற்கொல்லனின் சொல் கேட்டு ஆராய்ந்து பாராமல் தவறான நீதி வழங்கிய நானோ மன்னன். நானே கள்வன். அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என்முதல் தவறியது. அழியட்டும் என் ஆயுள். **(மயங்கி வீழ்ந்து உயிர் விட்டான் பாண்டியன்)**

**(அல்லது)**

**47. ஆ) பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளை தொகுத்தெழுதுக.**

**பொருளினது சிறப்பு :**

* ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வது பொருளன்றி வேறொன்றும் இல்லை.
* செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர். செல்வம் உடையவரை எல்லோரும் சிறப்புச் செய்வர்.
* எண்ணிய இடத்திற்குச் சென்று பகை என்னும் இருளைப் போக்குவது பொருட்செல்வம் என்னும் அணையாவிளக்கு ஆகும்.

**பொருளீட்டும் நெறி :**

* பிறருக்குத் தீங்கின்றி அறவழியில் பொருளீட்ட வேண்டும். அதுவே அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.
* அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழிகளில் ஈட்டும் செல்வத்தை நீக்க வேண்டும்.
* அரசுரிமையால் வந்த பொருள், மக்கள் வரியாகத் தரும் பொருள், பகைவரை வென்று கொண்ட திறைப்பொருள்,

ஆகியவை வேந்தர்க்கு உரிய பொருள்களாகும்.

**பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் :**

* அன்பையும் அருளையும் பேணுவதற்குப் பொருள் என்னும் செல்வம் உதவும்.
* தன்கையில் பொருளை வைத்துக் கொண்டு ஒரு செலயலைத் தொடங்குவது குன்றின் மேல் இருந்து கொண்டு யானைப் போரைக் காணபதற்குச் சமம்.
* பகைவரின் செறுக்கை அறுக்கும் கூர்மையான ஆயுதம் பொருளே. எனவே பொருளைத் தேடிச் சேர்க்க வேண்டும்.
* நல்வழியில் செல்வம் ஈட்டியவருக்கு அறமும் இன்பமும் எளிதாகக் கிடைக்கும்.

---

**48. அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாட்டினை விளக்கி எழுதுக.**

**தொன்மை :**

* முதல் மனிதன் தோன்றிய இடம் குமரிக்கண்டம். அவன் பேசிய மொழி தமிழ்மொழியே என்கின்றனர் ஆய்வாளர்கள்.
* தமிழின் தொன்மை கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பார் கம்பர்.
* உலகமொழிகளுள் மூத்த முதல்மொழி தமிழ்மொழி.

**பிறமொழித்தாக்கமின்மை :**

* பிறமொழிச் சொற்களை நீக்கினால் பல மொழிகள் தனித்து இயங்கா.
* தமிழில் உள்ள பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தமிழ் தனித்து இயங்க வல்லது.
* மிகுதியான வேர்ச்சொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் தமிழால் புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ள இயலும்.

**தனித்தன்மை :**

* தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது.
* இறவா இலக்கிய இலககண வளம் கொண்டது.
* தனக்கென தனி நோக்கும் போக்கும் கொண்டது.
* புதுமைகளை ஏற்று வளரும் மொழி. கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்றமொழி.

**இலக்கிய வளம் :**

* உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்று விளங்குபவை சங்க இலக்கியங்கள் ஆகும்.
* இக்காலத்தில் இவ்வளவு விரிவான இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது கமில்சுவலபில் என்னும் மொழியியல் பேரறிஞரின் முடிபு.
* சங்க இலக்கியங்கள் தொன்மக் கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்படாமல் மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றன. எனவே சங்க இலக்கியங்ளை மக்கள் இலக்கியங்கள் எனலாம்

**இலக்கணச் சிறப்பு :**

* தமிழ்மொழியின் இலக்கண அமைப்பு நுண்ணிய அறிவை உண்டாக்கவல்ல தனிச்சிறப்பை உடையது.
* தமிழ் இலக்கணம் படிக்கப்படிக்க இன்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட்.
* மிகப்பழைமையான இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகிறது.
* தமிழர் மொழிக்கு மட்டுமின்றி அகம், புறம் என வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துள்ளமை தனிச்சிறப்பு.

**தாய்மை :**

* தமிழ் திராவிட மொழிகளுக்குத் தாயாக விளங்குகிறது.
* அது பிராகுயி முதலான வடமொழிகளுக்கும் தாயாக விளங்குகிறது என்பார் கால்டுவெல்.
* ஆயிரத்து எண்ணூறு மொழிகளுக்கு வேர்ச் சொற்களையும் நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் கொண்டுள்ளதால் தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது.

**(அல்லது)**

**48. ஆ) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில்கல்வி குறித்து விவரிக்க**

**கலை, அறிவியல் கல்வி**

* மேனிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றோர் கல்லூரிகளில் சேர்ந்து தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதி யியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, கணிப்பொறியியல், வணிகவியல், பொருளியல் ஆகிய பிரிவுகளில் இளங்கலைப்பட்டம் பெற வேண்டும்.

* கலை, அறிவியல் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து கல்வியியல் பட்டம் பெற்றால் பட்டதாரி ஆசிரியராகப் பணியில் சேரலாம்.
* தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவண் அரசுத் தேர்வாணையம், வங்கித்துறை, ஆயுள் காப்பீட்டுத் துறை, தொடர் வண்டித் துறை முதலிய துறைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றால் பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.
* வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் வேலை வாயப்புகளைப் பெறலாம்.

**சிறுதொழில்கல்வி :**

* பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களும் தேர்ச்சி பெறாதவர்களும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து ஓராண்டு அல்லது ஈராண்டு பயிற்சி பெற்று பணியில் சேரலாம்.
* தொழிற்பயிற்சி நிறுவனங்களில் கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையாளர், தச்சர் முதலிய படிப்புகள் உள்ளன.
* இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.
* அவரவர் விருப்பத்திற்கேற்ப சேர்ந்து படித்து வேலை வாய்ப்பைப் பெறலாம்.
* அரசுப் பணிக்காகக் காத்திராமல் சுயதொழில் தொடங்கலாம்.

## பகுதி - 2

**49. செய்யுள் வடிவில் விடை தருக.** **2+2+3+3=10**

**அ) 'ஞாலம்' - எனத் தொடங்கும் குறள்**

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

**ஆ) 'நிலை' - என முடியும் குறள்**

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை.

**இ) 'மெய்தான் அரும்பி' - எனத் தொடங்கும் கம்பராமாயணப்பாடல்.**

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.

**ஈ) 'மீன்நோக்கும்' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.**

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.